**சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் - 2018**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த

வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு / இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் கணக்குகளை தயாரித்தல் அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப் படுவதுடன் மேலதிக நிதியத்திலிருந்து திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய 10 சதவீத பெறுமதி, வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் காசு அடிப்படையில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய பெறுமதி ரூபா 5,808,889 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏதேனும் ஆண்டொன்றுக்குரிய மொத்த மேலதிக நேர பெறுவனவுகளிலிருந்து 10 சதவீதம் காசு அடிப்படையில் மாதாந்தம் அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் அது தாபனவிதிக் கோவையின் ix ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏதேனும் வருடமொன்றுக்குரிய அரசின் திரட்டு நிதியிலிருந்து செலவு வைக்கப்படுகின்ற மொத்த பண அளவு வருமான கூற்றில் காண்பிக்கப்படுகின்றது. வருடாந்தம் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுகின்ற 10 சதவீத அளவினைக் கணக்கிடும் போது அதுவரை தீர்வையாகியிருந்த பண அளவின் பிரகாரம் கணக்கீடு செய்தல் மிகவும் பொருத்தமானதென அவதானிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகளை தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படை மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு வரை ஐயக் கடன் ஒதுக்கீடு சதவீதம் 15 சதவீதமாக இருந்ததுடன் நடப்பாண்டில் அது 5 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்த போதும் கடன்பட்டோர்களின் உள்ளதன்மை மற்றும் வாழ் காலம் என்பவற்றை கருத்திற் கொள்ளாமல் பொது வீதத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுகளின் போது பயன்படுத்திய அடிப்படையில் ஐயக் கடன்களின் ஒதுக்கீடு மேற் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியில் 2014 முதல் 2018 வரையான காலப்பகுதிக்குரிய கடன்பட்டோரே உள்ளடக்கப்பட்டிருந்தனர். அதில் 2014 - 2017 காலப்பகுதிக்குரிய ரூபா 145,595,100 இல் ரூபா 142,366,500 அல்லது 96 சதவீதம் அளவில் ஶ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவைகள் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. இக்கடன்பட்டோர் மீதிக்குரிய நிலுவை மேலதிக நேர வேலைக்குரிய பட்டியல் அந்த | கடன்பட்டோரின் உள்ளதன்மை மற்றும் வாழ் காலம் என்பவற்றை கருத்திற் கொண்டு அதன் பிரகாரம் வீதம் தீர்மானிக்கப்பட்டு ஐயக் கடனுக்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும் |

கொள்ளப்பட்டால் மீளாய்வாண்டின் இறுதியில் அக்கணக்கில் மீதி ரூபா 38,170,534 ஆக இருக்க வேண்டிய போதிலும் கணக்கீட்டு கொள்கை மாற்றங்கள் காரணமாக அது ரூபா 12,723,511 வரை குறைவடைந்திருந்தது.
மேலும் கணக்கீட்டு கொள்கை மாற்றங்களால் மீளாய்வாண்டிற்குரிய இவ்விடயங்களின் கீழ் செலவினமொன்று உருவாகாமல் இருந்ததுடன் ஐயக்கடன் மிகை ஒதுக்கீடாக ரூபா 16,672,894 விரிவான வருமான செலவினக் கூற்றில் மிகையுடன் சேர்க்கப்பட்டிருந்தது.

விமானக் கம்பனிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், உரிய மேலதிக நேர பட்டியல் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் உரிய மேலதிக நேர பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு அவ்விமானக் கம்பனி இணங்கியுள்ளது. (2014 - 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய அறவிடுவதற்குள்ள நிலுவை மேலதிக தொகை தற்போது முழுமையாக கொடுத்து தீர்வு செய்யப்பட்டுள்ளது) அவ்வாறே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த கடன்பட்டோர் அளவான ரூபா 254,470,228 தொகையில் ரூபா 108,875,128 அல்லது 43 சதவீதமான அளவு 2018 ஆம் ஆண்டிற்குரியதாகும். இத்தொகை 2019 ஆண்டினுள் தீர்வு செய்யப்படும். இந்நிலைமையில் கடன்பட்டோர் மீதியில் பிரதிநிதித்துவப்படுத்தும் பெறுமதியில் கடனை அறவிடுவதற்குள்ள ஆபத்து குறைந்துள்ளதால் ஐயக்கடன் ஒதுக்கீட்டு சதவீதம் 15 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை குறைக்கப்பட்டது. ஆதலால் நிதிக்கூற்றுக்களின் 21 ஆம் பக்கத்தில் கணக்கீட்டு கொள்கை தொடர்பான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருந்த ஐயக்கடன் ஒதுக்கீட்டு சதவீதம் 2018 ஆம் ஆண்டில் 5 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

### 1.5.4 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 2,750,000 பெறுமதியான பிணை பொறுப்பு மற்றும் அதற்குரிய முதலீட்டு வருமானம் மீளாய்வாண்டின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | இலங்கை சுங்கத்தினால் கப்பல் நடவடிக்கைகளுக்குரிய கப்பலின் உள்நாட்டு முகவர் அல்லது கப்பலுக்குரிய கம்பனியின் உள்நாட்டு முகவரிடமிருந்து ரூபா 100,000 வைப்புப்பணம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் வைப்புப் பணம் பொது திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் 18/128 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்படுகின்றது. அவ்வாறே இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் பணம் அத்தினத்திலேயே திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் வங்கி கணக்கு வலையமைப்பின் கீழ் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் பேரில் பேணிச் செல்லப்படும் மக்கள் வங்கியின் 00110129026664 ஆம் இலக்க கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் இக்கணக்கின் கீழ் சேரும் பணம் பொது திறைசேரியின் வங்கி மேலதிகப் பற்றிற்காக செலுத்தப்படும் வட்டியை குறைத்துக் கொள்வதற்காக வசதியை வழங்குகின்றது. விடயம் எவ்வாறாயினும், மேற்படி வர்த்தமானி அறவித்திலின் பிரகாரம் இங்கு குறிப்பிடப்பட்ட ரூபா 100,000 வைப்பிற்காக வட்டி உழைப்பு மேற்கொள்ளப்பட்டு அதில் அரசிற்குரிய பங்கினை வைத்துக்கொண்டு எஞ்சிய பணம் வைப்பாளருக்கு செலுத்தப்பட வேண்டும். இந்த வகையில் நடவடிக்கை எடுத்தால் பொது திறைசேரிக்கு மேற்படி பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வங்கி மேலதிகப்பற்று வட்டியை குறைத்துக் கொள்வதற்குள்ள இயலளவு இல்லாது போகும். அவ்வாறே மேலதிகப்பற்று வட்டி, வைப்புக்களுக்காக கிடைக்கும் வட்டியை விட ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் கூடுதலாக இருப்பதால் இவ்வேலைத்திட்டம் பொருளாதார ரீதியாக அரசிற்கு பாதகமானதாக இருப்பதால் உரிய வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் பகுதியின் 1 ஆம் பந்தியின் 6 உப இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்களின் இறுதி இரண்டு வரிகளை திருத்தம் செய்வது பொருத்தமானது என கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | பிணைப் பொறுப்பு பெறுமதி மற்றும் அதற்குரிய வட்டி முறைப்படி கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் |

### 1.5.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தோகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பொது வைப்புக்கள் | 349,140 | வைப்பு பதிவேடு | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும் ரூபா 349,140 தொகை மிகவும் நீண்டகாலமாக இனங்காண முடியாததன் காரணமாக தீர்வு செய்யப்படாத பொறுப்பொன்றாக மேலதிக நிதியத்தின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் இது தொடர்பாக அரச நிதித் திணைக்களத்திற்கு 2019 மே 06 ஆந் திகதிய கடிதமொன்று அனுப்பியுள்ளதுடன் அதன் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | அரச நிதி திணைக்களத்துடன் கலந்துரையாடி விரைவில் இறுதி முடிவுக்கு வர வேண்டுமெனவும் |
| (ஆ) | கடன் பட்டோர் | 254,470,228 | மீதி உறுதிப்படுத்தல்கள் | பதில். அனுப்பியிருந்த சகல கடன்பட்டோருக்கு, உங்களுக்கும் பிரதியொன்றுடன் மீதி உறுதிப்படுத்தப்பட்டு அனுப்புமாறு OTC/15 மற்றும் 2019 சனவரி 28 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த கடிதங்களுக்காக சில நிறுவனங்களிலிருந்து பதில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதன் பிரதி இதனுடன் அறிந்து கொள்வதற்காக இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நேரடியாக பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 81 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த காணப்பட்ட ரூபா 254 மில்லியனான மொத்த கடன்பட்டோர்கள் மீதிகளில் ரூபா 186 மில்லியன் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனி யிடமிருந்து அறவிட வேண்டி இருந்ததுடன் இந் நிலுவை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை மேலதிக பணமான ரூபா 186 மில்லியனில் ரூபா 29.9 மில்லியன் 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் அறவிடப்பட்டுள்ளதுடன் அறவிடுவதற்கு எஞ்சியுள்ள தொகை 2015 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளாகும். இதற்குரிய சகல மேலதிக நேர பட்டியல்கள் அந்த விமான கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அம்மேலதிக நேர பட்டியல்களையும் விரைவாக தீர்ப்பதற்கு அவ்விமான கம்பனி இணங்கியுள்ளது. | இக்கம்பனி ஆயுட்கால உறுப்பினராக இருப்பதால் குறித்த மீதியை துரிதமாக அறவிட வேண்டுமென |
| (ஆ) 1967 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 75 நிறுவனங்களினால் இலங்கை சுங்கத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 253,314 தொகை வெளிநிறுவனங்களில் ஈடுபடுவதன் ஊடாக உழைக்கப்பட்டிருந்த ரூபா 12.5 மில்லியன் ஆக இருந்தது. இதன் பிரகாரம் மொத்த முதலீடு ரூபா 12.8 மில்லியன் இந்நிறுவனங்களில் நிலைத்திருதன்மை உட்பட தற்போது சேவை வழங்கல் தொடர்பாக எவ்வித புலனாய்வொன்றும் மேற்கொள்ளப்படாமல் உரிய வைப்பு பொறுப்புக்கள் மற்றும் முதலீட்டுக் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு வந்தன. | ரூபா 12.5 மில்லியனான முதலீட்டு பெறுமதிக்கு உரிய முதலீட்டு வருமானம், முதலீட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டு விசேட வைப்புக்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | தற்போது சேவை வழங்கல் மற்றும் நிறுவனங்களின் நிலைத்திரு தன்மை தொடர்பாக புலனாய்வு செய்யப்பட்டு முறையான கணக்கு வைத்தல் மேற்கொள்ளவோ தேவையான வேறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) சுங்க கட்டளை அதிகாரச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தல் '2992 திசெம்பர் 31 ஆந் திகதிய 2018(F) இலக்க உள்ளக சுற்றறிக்கை | • உதவி நிவாரண உத்தியோகத்தர் (துறைமுக அதிகாரசபை) இனால் கொள்வனவு கையாளல் செயற்பாடு தொடர்பான தரவு நாளாந்தம் கணக்காளர் (மேலதிக நேர வேலை) இற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.<br>• மேலதிக நேர வேலை பெறுவனவுகள் நிலுவைகளை தவிர்ப்பதற்கு பட்டியல் நாளதுவரையாக வழங்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | • உதவி நிவாரண உத்தியோகத்தர் (துறைமுக அதிகாரசபை) இன் மூலம் சேகரிக்கப்படும் மேலதிக நேர அறிக்கைகள் நாளாந்தம் கணக்காய்வாளர் (மேலதிக நேர வேலை) இற்கு அனுப்புதல் மற்றும் மாதிரிப் படிவம் 06 மற்றும் IMO FAl உட்பட ஏனைய கப்பல் பதிவேடுகள் நாளாந்தம் சுங்கத்தின் துறைமுக கட்டுப்பாட்டு அலகு (Port Control Unit) இற்கு அனுப்புவதற:கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட விதிகள் பிரமாணங்கள் சுற்றறிக்கை தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டுமெனவும் |
| | கப்பல் முகவர்களின் தகவல்கள் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தரவுகளுடன் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தல் அறிக்கையொன்று நிவாரண உத்தியோகத்தரால் கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | • கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மேலதிக நேர வேலைகள் தொடர்பாக மேலதிக நேர பதிவேட்டில் உரிய விண்ணப்ப இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அறவிடுவதற்குள்ள பணம் வருடாந்தம் கணக்கீடு | சட்ட விதிகள் பிரமாணங்கள் சுற்றறிக்கை தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டுமெனவும் |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டு அடுத்த ஆண்டின் போது அவர்களின் பிணை பொறுப்பினை புதுப்பிப்பதற்கு முன்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் கப்பல் முகவர் நிறுவனங்களிலிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்குள்ள பணம் நிதிக்கூற்றுக்களில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளாக கடன்பட்டோரின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் இதுவரை 30 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | |
| • கொள்வனவு கையாளல் தகவல்களின் சரியான தன்மையை பரீட்சித்தல் இலங்கை சுங்கத்தின் துறைமுக நிர்வாக பிரிவினால் மேற் கொள்ளப்பட்ட போதிலும் அதற்காக சட்டரீதியான செயற்பட்டுக் கையளிப்பு ஒன்று அல்லது தகவல் பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | • 2019 ஏப்ரல் 01 ஆந் திகதிய DOPL 218 F ஆம் இலக்க திணைக்கள கட்டளையின் பிரகாரம் சுங்கத்தின் நிர்வாக பிரிவு (Port Control Unit) கப்பல் துறைமுகத்திற்கு வருகை தருதல் மற்றும் அது தொடர்பாக அறிக்கைகளை பேணுவதற்கும் மேலதிக நேர அறிக்கைகள் மற்றும் துறைமுக கொள்கலன் பிரிவின் மூலம் வழங்கப்படும் அறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டு செலுத்த வேண்டிய உரிய மேலதிக நேர வேலை அளவு கணக்கிடுவதற்கும் நிதிப்பிரிவிற்கு அத்தகவல்களை சமர்ப்பிக்கும் | உள்ளக சுற்றறிக்கை தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு நிலைமையை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் தெரிவுத்துக் கொள்கின்றேன். | |
| | | • கப்பல் முகவர் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ரூபா 100,000 தொகையான வைப்புக்களுக்கு பொருத்தமான முதலீட்டு வழியொன்றில் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானத்திலிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பகுதியை இனங்கண்டு மிகுதியை வைப்பாளருக்கு செலுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | • உரிய வர்த்தமானி அறிவித்தலில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்குள்ள இயலுமை பற்றி தேடி ஆராயப்பட்டு வருகின்றது. | உள்ளக சுற்றறிக்கை தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் |
| (ஆ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 2017 3 ஆம் இலக்கபொது நிர்வாகச் சுற்றறிக்கை | அனைத்து அரச உத்தியோகத்தர்களும் அவர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லுகையினை பதிவு செய்வதற்காக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்த வேண்டிய போதிலும், இலங்கை சுங்க அலுவலர்கள் எவரும் அத்தேவையை நிறைவேற்றியிருக்காத போதிலும் மீளாய்வாண்டிற்காக மேலதிக நேர வேலையாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 651.8 மில்லியனாக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் பராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட போதிலும் அதற்காக இறுதி தீர்மானமொன்றுக்கு வரமுடியாமல் இருந்தது. | அரச துறையின் சகல உத்தியோகத்தர்களும் உரிய பொதுச் சுற்றறிக்கையின் பிரகாரம் சுங்க பதவியணியினராக செயற்பட வேண்டுமெனவும் |
| (இ) | 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மேலதிக நேரத்தினுள் முதலீடாக ரூபா 13 மிலலியனான தொகை மற்றும் திறைசேரி நிதியமாக ரூபா 2,179 மில்லியன் தொகை நீண்டகாலமாக திரண்டு காணப்பட்ட போதிலும் ஏற்பாடுகின் பிரகாரம் மிகை திரட்டு | 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/12 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் சுங்கத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கடமை நேரத்திற்கு புறம்பாக நிறைவேற்றுகின்ற சேவைகளுக்காக கட்டணங்களின் அல்லது | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் திரண்டு காணப்படும் மிகைப் பணத்தை திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி பொருத்தமான |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடுகளாக அறவிடப்படுகின்ற சகல பணமும் 6000-0-0-6-32 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் அதாவது சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் இதன் நிர்வாக அதிகாரி சுங்கப் பணிப்பாளர் நாயகமாகும். வருடாந்தம் மேலதிக நேர வேலையாக சேரும் பெறுவனவுகளில் 10 சதவீதம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் எஞ்சிய 90 சதவீதம் தொகை சுங்க உத்தியோகத்தர்களுக்காக கொடுப்பனவு செய்யப்படுகின்றன. மேலும் தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மேலதிக நேரமாக சேர்க்கப்படும் கட்டணங்களில் 10 சதவீதத்தை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்து எஞ்சியதை உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக இடமளிக்கலாம். இவ்வகையில் நடவடிக்கை எடுத்ததன் மூலம் அவர்கள் கூடுதலாக சேவைக்காக அர்ப்பணிப்பு செய்வதால் திணைக்கள செயற்திறனான மேம்படுத்திக் கொள்வதற்கு காரணமாகின்றது. அவ்வாறே இந்நிதியத்தில் திரட்டிய நிதியத்தில் 10 செலவு வைக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் தொகை என்பதால் 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தேவைப்படவில்லை. | நடவடிக்கை எடுத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 334,904,166 மிகையாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 320,188,374 ஆக இருந்தமையால் அதன் பிரகாரம் அதனோடொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,715,792 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பாய்வு

சுங்க கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், உத்தியோகத்தர்களால் வழமையான கடமை நேரத்திற்கு புறம்பாக வேலைகளில் செய்யப்படுகின்ற கடமைகளுக்காகவும் வழமையான கடமை நிலையங்களிலிருந்து புறம்பான இடங்களில் நிறைவேற்றப்படும் கடமைகளுக்காகவும் வெவ்வேறு தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், இலங்கை முதலீட்டு சபைக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்காக அந்நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அவ்வாறே அம்மேலதிக கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள் இந்நிதியத்திற்கு செலவினமொன்றாக கருதப்படும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் மேற்குறித்த படி மேலதிக நேரம், கப்பல் சரக்கு பரீட்சிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 1,071,405,674 ரூபா 335,848,526 மற்றும் ரூபா 13,728,000 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வேலைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக மேலதிக நேர வருமானத்தின் 61 சதவீதமாக ரூபா 651,843,884 தொகையும், கப்பல் சரக்கு பரீட்சிப்புக்களின் வருமானத்தில் 50 சதவீதமாக ரூபா 167,924,263 தொகையும் தகவல் தொழில்நுட்ப வருமானத்தின் 80 சதவீதமாக ரூபா 10,982,400 தொகையும் ஒன்றுசேர்த்து செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறை சொத்து விகிதம் 5:15 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ்விகதம் 6.08 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நடைமுறை சொத்து விகிதம் 0.93 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்கு பிரதான காரணமாக கடன்பட்டோரின் அதிகரிப்பு மற்றும் திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதிகளில் அதிகரிப்பொன்றாக அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்கள் பூராகவும் கடமைகளில் ஈடுபடுத்துவது மிகவும் அசாதாரண | இது தொடர்பாக சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் இதுவரை வழங்கப்பட்ட திணைக்கள கட்டணங்கள் மற்றும் மேலதிக | மேலதிக நேர கொடுப்பனவின் போது மேற்பார்வை உத்தியோகத்தரின் கூடிய மேற்பார்வையொன்றுடன் |

| | | |
|---|---|---|
| நிலைமையொன்றாக இருந்த போதிலும் சுங்க திணைக்களத்தின் சில உத்தியோகத்தர் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக அறிக்கையிட்டு மேலதிக நேரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. வார இறுதி நாட்களில் சில கிளைகளில் சாவியையோ கையேற்கப்படாமல் இருக்கும் போது மேலதிக நேர கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது அவ்வாறான 628 நாட்களுக்காக ரூபா 849,638 தொகை மேலதிக படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நேர குழுவின் பரிந்துரை அடிப்படையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக முறைமையொன்று தயாரிப்பது தொடர்பாக திணைக்களத்தால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் |
| மேலதிக நேர நிதிய கொடுப்பனவு முறையான நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படவில்லையென முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிலைமையை முறைப்படுத்துவதற்காக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளுக்காக வெளிநாடு சென்றிருந்த மூன்று உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர வேலையாக ரூபா 8.333 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் இதுவரை வழங்கப்பட்ட திணைக்கள கட்டணங்கள் மற்றும் மேலதிக நேர குழுவின் பரிந்துரை அடிப்படையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக முறைமை யொன்று தயாரிப்பது தொடர்பாக திணைக்களத்தால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | இது தொடர்பாக காணப்படும் சட்ட விதிகளின் பிரகாரம் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| மேலதிக கொடுப்பனவிற்காக நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் முறையான நடைமுறையொன்று இல்லாமை மற்றும் மேலதிக நேர சேவையில் ஈடுபடுதல், பதிவேடுகளைப் பேணுதல், கண்காணிப்பு மற்றும் கொடுப்பனவு முறையாக மேற்கொள்ளாமை. | சுங்கத் திணைக்களத்தினால் மேலதிக நேர கொடுப்பனவு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு மேலதிக நேர கொடுப்பனவு செய்யும் புதிய நடைமுறையொன்று தயாரிக்கும் செயற்திட்ட மொன்று தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | மேலதிக நேர கொடுப்பனவின் போது மேற்பார்வை உத்தியோகத்தரின் கூடிய மேற்பார்வையொன்றுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறே கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டிருந்த வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (கடமை) களுக்காக சமூகமளித்த உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும் காலப்பகுதியில் மேலதிக நேர சேவையில் ஈடுபட்டுள்ளதாக உரிய மேலதிக நேர கையொப்ப பதிவேடுகளை அனுப்பி வைத்த பணிப்பாளர்களிடம் தற்போது விளக்கங்களைக் கோரியிருந்ததுடன் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக சமூகமளித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அக்காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த மேலதிக நேர படிகளை உடனடியாக மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஊழியர் வருகை வெளியேறல் என்பவற்றிற்காக கைவிரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாமை. | 2.1(ஆ) இல் பதில் பொருத்தமானதாகும் | கைவிரலடையாள இயந்திரங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கணக்காய்வு விசாரணைகளில் ஏற்றுக்கொண்ட குறைபாடுகள் திருத்துவது தொடர்பான கண்காணிப்பொன்று காணப்படவில்லை. | இதுவரை இணக்கம் பெற்றுள்ள கணக்காய்வு விசாரணையின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் அநேகமானவை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மேலும் இது தொடர்பான மேற்கொள்ள வேண்டிய மேம்படுத்தல்கள் குறித்துக் கொள்ளப்பட்டன. | உரிய மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஈ) | மேலதிக நேர பதிவேடுகள் நாள்தோறும் கண்காணிப்பு உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்பட்டு தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்படி (அ) இன் பதில் பொருத்தமானதாகும் | உரிய மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (உ) | மேலதிக நேரலை தொடர்பான அண்மித்த சுங்க கட்டளை சட்டம் தொடர்பில் (DOPL) கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | மேலதிக நேர வேலை தொடர்பாக இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள திணைக்கள சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | உள்ளக சுற்றறிக்கை தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் |